**மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி அவர்களது உரையிலிருந்து முக்கிய குறிப்புகள்.**

* 2009 பிறகான அரசியல் என்பது புலிளை அழித்துவிட்டால், இனப்படுகொலை நடத்திவிட்டால் கோரிக்கை அழிந்துவிடும் என்று தான் அவர்கள் எதிர்பார்த்தனர். தமிழீழ விடுதலை என்னும் கோரிக்கையை அழிப்பதற்காகத் தான் 2009க்குப் பிறகான தொடர்ச்சியான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

* போராட்டங்கள் ஊடாகப் பார்க்கும் பொழுது இரண்டு வகையான சிந்தனைப் புலன்கள் வைக்கப்படுகின்றன. ஒன்று இந்தியப் புலம் மற்றொன்று மேற்குலகப் புலன். இரண்டும் ஒத்தக் கருத்தை உடையவை. மேற்குலகம் இனப்படுகொலைக்குப் பிறகு ஐ.நா.வின் சர்வதேச விசாரணை என்னும் விதியை மறுதலித்து நல்லிணக்க குழு ஒன்றை அமரிக்காவின் ஊடாக வைக்கின்றனர். இந்தியா 13-வது சட்டத்திருத்தத்தை முன்வைக்கிறது. ஆக இரண்டும் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான அரசியல் தீர்வு என்பதை வலியுறுத்துகிறது.

* 2009க்கு பிறகு தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதி இல்லை. இந்நிலையில், தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதியை உருவாக்கி, ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலையை உருவாக்குவதற்காக, 13வது சட்டத்திருத்தத்தின் ஊடாக வடக்கு மாகாணத் தேர்தல் நடத்தப்படுகிறது. அதன்படி தான் விக்னேஸ்வரனும் இந்தியாவின் குரலை வெளிப்படுத்துகிறார், தமிழகத்தை நோக்கிய தாக்குதலை முன்வைக்கிறார்.

* தமிழீழத் தமிழர்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டும். ஏனென்றால், தமிழ்த் தேசிய கூட்டணி தனித் தமிழீழம் மற்றும் இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை போன்ற கோரிக்கைகளை மறுக்காமல் தேர்தலை முன்னெடுக்க

வேண்டும். அப்படியில்லையென்றால் அத்தேர்தல் என்பது நமக்கெதிரானது. தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தான் இலங்கையை எதிர்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரை தேர்ந்தெடுக்க முடியாத தேர்தலை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

* தமிழ்த் தேசிய கூட்டணி வெற்றி பெற்றால், விக்னேஸ்வரன் மாகாண முதல்வரானால், ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான அரசியல் தீர்வு என்பதை தமிழ் மக்கள் ஒப்புக்கொண்டதாக இந்தியாவும், இலங்கையும், மேற்குலகும் முன்னிறுத்த மேற்கொள்ளும்.

* இந்தியா அமெரிக்காவின் பிரச்சனைகளை மையப்படுத்தி ஒரு நிறுவனம் இத்தேர்தலை நடத்த ஒரு நிறுவனம் அறிவுறுத்துகிறது. அது ICG எனப்படும் International Crisis Group. இது பல பன்னாட்டு தலைவர்களைக் கொண்டு நடத்தப்படும் தொண்டு நிறுவனம் போன்ற சிந்தனைப் புலம். இது இரு நாடுகளின் பொதுப்பிரச்சனைகளை மையப்படுத்தி திட்டங்கள் உருவாக்குகிறார்கள். இத்திட்டங்களின் அடிப்படையில் தான் தற்போதைய நிகழ்வுகள் நடக்கின்றன.

*Corporate-களுடன் இணைந்து செயல்படும் ICG தான் எகிப்த்தில் நடைபெற்ற எழுச்சியையும், தற்போது நடைபெறும் கலவரங்களையும் வடிவமைத்தவர்கள். இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளைக் கொண்டு ஒரு அறிக்கையை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கை தான் இந்தியா, இலங்கை, அமெரிக்கா, ஐ.நா. போன்ற ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். இதனடிப்படையில் வந்தது தான் TESO, அமெரிக்கத் தீர்மானம் போன்றவை.

* மன்னார் பேசினை அழித்து, அங்கு சிங்கள மக்களை குடியேற்றி சிங்கள மயமாகுவதற்கு, மன்னார் ஆட்சித் தலைவர் இராணுவ அதிகாரிகளுக்கு

அனுப்பிய அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், இந்துத்துவாவும் பௌத்தமும் இஸ்லாமியர்களுக்கெதிரான தாக்குதல்களை தொடர்ச்சியாக இலங்கை, பர்மா என்று தெற்காசியாவில் நடத்துகின்றன. தமிழ்நாட்டில் கூடா சாதி ஊடாக இது நடத்தப்படுகின்றது.

* மாகாணத் தேர்தல் என்பது ஒரு ஏமாற்று வேலை. இதற்கெதிராக உலகெங்கும் தமிழர்கள் இணைந்து போராட வேண்டும். மேலும் இதை யாழ் மாணவர்கள் மக்களிடத்தில் கொண்டு செல்ல முன்னெடுக்க வேண்டும். பொது வாக்கெடுப்பை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கவும் யாழ் மாணவர்களிடம் கோரிக்கை விடுகிறேன்.

**திரு.குடந்தை அரசன், விடுதலைத் தமிழ் புலிகள் கட்சி.**

சொந்த நாட்டில் உள்ள மக்களுக்கே தலைவனாக இருக்க தகுதியில்லாத, சமநீதி சமத்துவ அரசை தர தகுதியில்லாத ஒருவர், இனப்படுகொலை செய்த ஒருவர், காமென்வெல்த் மாநாட்டை நடத்தி அதன் தலைவராக இருக்கப்போவதை ஏற்க முடியுமா? என்ற கேள்வியை எழுப்பினார்.

13வது சட்ட திருத்தத்தினால் எந்த ஒரு மாற்றத்தினையும் செய்துவிட முடியாது. இந்தியா தங்களை நிலை நிறுத்திகொள்ள இதை ஒரு சாக்காக பயன்படுத்திகிறது. இலங்கையும் இதை சடங்காக பார்க்கிறது.

தற்சமயம் முஸ்லீம் பள்ளிவாசல்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுகின்றன,ஒரு காலத்தில் புலிகளை முஸ்லீம் சிறுபான்மை மக்களுக்கு எதிரானவர்களாக கட்டமைத்தனர், ஆனால் முஸ்லீம் பெருமக்கள் தமிழீழ கோரிக்கையை ஆதரித்து பெருவாரியாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.தொடர்ந்து களத்தில் நின்று போராடிவருகின்றனர்.

தனி தமிழீழத்தை ஆதரிக்கிற யாரும் 13வது சட்ட திருத்தத்தை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தனி நாடு தவிர வேறொன்றும் தீர்வில்லை!

**திரு.அன்பு தனசேகரன், திராவிடர் விடுதலைக்கழகம்.**

இலங்கையில் போராடிக்கோண்டிருக்கும் மக்களால் 1987ஆம் ஆண்டிலேயே புறக்கணிக்கப்பட்ட ஒன்று.

ராஜீவும், ஜெயவர்த்தனேவும் சேர்ந்து முட்டாள்தனமாக போட்ட தீர்மானமாகும், அதனால் மக்களுக்கு அதிராகம் ஏதாவது இருக்கிறதா?

தனிநாடு என்ற கோரிக்கையை நோக்கி செல்லும் போது, இதுபேன்ற சட்ட திருத்தங்கள் ஒரு போதும் உதவாது.

வாக்கெடுப்பு நடத்த வேண்டும், தனி ஈழம் அமைய வேண்டும் அதுவே நமது தீர்வு.

**சிபி, ஒருங்கினைப்பாளர், தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு.**

அமெரிக்கா கொண்டுவந்த போலி தீர்மானத்தை எப்படி டெசோ கையிலெடுத்ததோ, அதே போன்று இந்த 13வது சட்ட திருத்ததை கையிலெடுத்துள்ளது.அமெரிக்க தீர்மானத்தின் முகத்திரையை கிழித்தது போல, 13வது சட்ட திருத்தத்தின் முகத்திரையை கிழிப்போம்.தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பு நடத்த முன்னெடுப்பதுதான் எங்கள் வேலை,அதற்கான அடுத்த கட்ட போராட்டத்தினை விரைவில் அறிவிப்போம்.

**திரு.சேகர். தொழிளாலர் சீரமைப்பு இயக்கம்.**

தமிழக அரசு சட்டமன்றத்தில் பொதுவாக்கெடுப்புக்கான தீர்மானம் போட்டது, அதனை நிறைவேற்ற தொழிளாலர் சீரமைப்பு இயக்கம் வலியுறுத்துகிறது.

**கே.எம் ஷெரீப், தமிழக மக்கள் ஜனநாயக கட்சி.**

1987 ஆம் ஆண்டிலேயே மக்களால் தூக்கியெறியப்பட்ட ராஜீவ், ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் ஒரு பாதியாக இருக்ககூடிய 13 வது தீர்மானத்தினை முன்வைத்து ஒரு போலி மாகாணத்தேர்தலை நடத்தி, அதன்

மூலம் அனைத்து தமிழ் ஈழ மக்களே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள், தேர்தலில் வாக்களித்துவிட்டார்கள், இலங்கை அரசினை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று உலகத்திற்கு சொல்ல ஒரு மயையான வேலையை செய்கிறார்கள்.

**திரு.நெல்லை முபாரக், மாநில பொதுசெயலாளர், SDPI கட்சி.**

13 வது சட்ட திருத்தம் என்பது ஒரு போதும் தமிழ் மக்களுக்கு உதவபோவதில்லை, இதனை SDPI கட்சி ஒரு போதும் ஆதரிக்காது.

நவீன ஹிட்லராக நம்முன் இருக்கிற ராஜபக்சேவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும், இன படுகொலைக்கான தண்டனையை கொடுக்கவேண்டும். அங்கே நடக்கும் மனித போரழிவிற்கு சர்வதேச சமூகம் தண்டனை வழங்க முன்வரவேண்டும்.தமிழன் என்றோரு இனமுண்டு அதற்கு தனியே ஒரு குணமுண்டு சமயம், சாதியை கடந்து போராட்டதினை முன்னெடுக்க வேண்டும்.தமிழீழ கோரிக்கையை நோக்கிய போராட்டதில் நாங்கள் எப்போதும் துணை நிற்போம்.

**திரு. அன்சாரி, மனித நேய மக்கள் கட்சி.**

வடக்கின் வசந்தம் என்று சொல்லி நலத்திட்டங்கள் செய்கிறொம் என்று சோல்லும் ராஜபக்சேவின் ஊதுகுழலாக செய்லபடும் இந்திய அரசு, அதற்கு துணையாக செய்தி ஊடகங்களும் இருக்கிறது. வளர்ச்சி என்ற போர்வையில் தான் ராஜபக்சே அனைத்து வேலைகளும் செய்யப்படுகின்றன.மசூதிகள் மட்டுமல்ல, இப்போது தேவாலயங்களும் தாக்க படுகின்றன.சிங்கள பவுத்த வெறிபிடித்தவர்கள் ஏனய சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமையோடு விளையாடுகிறார்கள், இனிதான் அவர்களுக்கு ஆபத்து தொடங்க இருக்கிறது.வான் படையையும், கடற்படையையும் வைத்திருந்தவர்கள் தமிழர்கள்.உலகத்திலேயே போராட பிறந்தவர்கள் தமிழர்களும், இஸ்லாமியர்களும் தான்.புலிகளுக்கு பிறகு ஒரு மயான அமைதி நிலவுவது போல தெரிகிறது, அது அமைதியல்ல பூகம்பத்திற்கான முன்னோட்டம்.மக்கள் உணர்வு பூர்வமாக உள்ளார்கள்.விடுதலை போராட்டங்கள் தோற்றதாக சரிதிரம் இல்லை, என்றாவது ஒரு நாள் மீண்டும் எழும்.

**திரு, தமிழானந்தம், பாலச்சந்திரன் மாணவர் இயக்கம்**

அமெரிக்க தீர்மானத்தினை எரிப்பு போராட்டதினை நடத்தியது போல, 13வது சட்ட திருத்த தீர்மானத்தை எரிக்கும் போராட்டத்தினை, மற்றும் காமென்வெல்த் மாநாடு இலங்கையில் நடக்க விடக்கூடாது எனவும், மாகாணத் தேர்தலை புறக்கணிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் போராட்டதினை நடத்த திட்டமிட்டுள்ளோம், அதில் முதல் கட்டமாக வருகிற ஆகஸ்டு 25 மாலை 5 மணியளவில் சென்னையில் வள்ளுவர்கோட்டத்திலும், நெல்லையி பாளையங்கோட்டையிலும் ஆர்பாட்டம் நடக்கும்.இதில் தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பும் பங்கெடுக்கும்.